# இசையமைப்பாளர் கே.எம். சவாஹிர்

## ஆடித்து முத்துக்கள் 129

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

"இசையும் அதன் செழுமையும் என்னுள் இன்பத்தைக் கிளர்த்துகின்றன. என்னையும் என் ஆத்மாவையும் அது வருடிச்செல்கிறது. இந்த இசை உணர்வுதான் என்னை வாழ வைக்கிறது".இவ்வாறு 'இசையோடு வாழ்தல்' என வாழ்ந்துவரும் இசையொலி கே.எம். சவாஹிர் கூறினார். கடந்த 64 வருடங்களாக தமிழ் மெல்லிசைப் பாடல்கள், பொப்பிசை



பாடல்கள், இஸ்லாமிய கீதங்கள், மேடை-தொலைக்காட்சி நாடகப் பின்னணி இசை, திரைப்பட இசை என பல்வேறு இசையாற்றுகை செய்துவரும் மாபெரும் கலைஞனை இங்கு பதிவு செய்வதில் பெருமையடைகிறோம்.

கொழும்பு புதுக்கடை என்ற இடத்தில் ஒக்ரோபர் 17, 1931ல் பிறந்த சவாஹிர் அவர்கள் ஆரம்பக் கல்வியை கொழும்பு பாத்திமா மகாவித்தியாலயத்திலும் உயர்கல்வியை கொழும்பு ஸாகிராக் கல்லூரியிலும் பயின்றார். இவரது தந்தையார் கே.எம்.கஸ்ஸாலி மொகமட் கொழும்புத்துறைமுகத்தில் பணியாற்றி ஓய்வுபெற அந்த வேலை மகனான சவாஹிருக்குக் கிடைத்தது. 1956 இலிருந்து 36 ஆண்டுகள் துறைமுகத்தில் கப்பலோட்டியாகப் பணிபுரிந்து இவர் ஓய்வு பெற்றார்.

இவர் இசையில் ஈடுபட நேர்ந்த அனுபவம் சுவையானது. "எனது வீட்டுக்கு அருகே ஒரு வீட்டில் எப்பொழுதும் இசை கேட்டபடி இருக்கும். அந்நாளில் பெரும் இசையமைப்பாளர்களாக இருந்த எடி மாஸ்டர், சாதிரிஸ் மாஸ்டர், ரூபசிங்கா மாஸ்டர் ஆகியோர் அந்த வீட்டில் இசை ஒத்திகை பார்ப்பார்கள். பெரும் பாடகர்கள் எல்லாம் அங்கு வந்து பாடுவார்கள். அந்த ஒத்திகையைப் பார்ப்பதற்காக பாடசாலை விட்டதும் ஓடோடி வருவேன். எனது இசை ஆர்வத்தைத் தூண்டியதும் இசைப் பசிக்குத் தீனி போட்டதும் அந்த இசை ஒத்திகைகள் தான்" என்றார் இசையமைப்பாளர் சவாஹிர் அவர்கள்.

ஒரு நாள் அந்த வீட்டுவாசலில் இசை ஒத்திகையை ஆர்வத்தோடு பார்த்துக்கொண்டு நின்றபோது இசையமைப்பாளர் எடி மாஸ்டர் இவரைப் பார்த்து "மகனே சங்கீதம் படிக்கிறாயா" என்று கேட்டிருக்கிறார். அன்று இவருக்கு அடித்தது இசை அதிஷ்டம். எடி மாஸ்டரை முதற்குருவாக ஏற்று அவரிடம் ஆர்மோனியம் வாசிப்பதை முறைப்படி கற்றுத் தேர்ந்தார். ஆர்மோனியத்துடன் மட்டும் நின்றுவிடாது புல்லாங்குழல், மென்டலின், பியானோ, எக்கோடியன் போன்ற வாத்தியங்களையும் கற்றுக் கொண்டார்.

இதன் பின்னர் தமிழ், சிங்கள நாடகங்களுக்குப் பின்னணி இசையாக ஆர்மோனியத்தை வாசிக்க ஆரம்பித்தார். குறிப்பாக ராஜேந்திர மாஸ்டர் என்ற நாடகக் கலைஞன் உருவாக்கிய 'மனோரஞ்சித நாடகக் குழு'வில் நிரந்தரக் கலைஞனாக பல இசை நாடகங்களில் பங்கேற்றார் சவாஹிர் அவர்கள். இந்த சபாவில் உருவானவர்களில் எஸ்.எஸ். சந்திரன், வி.கே.டி. பாலன் ஆகியோர் பின்னாளில் தமிழகச் சினிமாத்துறையில் புகழ்பெற்றது குறிப்பிடத்தக்கது.


1950ல் தனது 19 வது வயதில் இலங்கை வானொலியில் இசைக்கலைஞனாகக் கால் பதித்த இவரது இசைப்பயணம் இன்றும் பொங்கிப் பிரவாகித்துச் செல்கிறது. வானொலிக் கலையகத்தில் இவர் முதன் முதலில் இஸ்லாமியக் கீதங்களுக்கு இசையமைத்தார். இவ்வாறு இவர் இசையமைத்த பாடல்களை பிரபல பாடகர்கள் மொஹிதின் பெக், டொனி ஹசன் போன்றோர் பாடியிருந்தனர். ரூபவாஹினித் தொலைக்காட்சி ஆரம்பித்த நாளிலிருந்து இன்றுவரை இஸ்லாமியப் பாடல்களுக்கு இவரே இசையமைத்து வருகிறார்.

இஸ்லாமிய பாடல்களைத் தவிர பல ஈழத்து மெல்லிசைப் பாடல்களை உருவாக்கிய பெருமை சவாஹிர் அவர்களுக்கு உண்டு. மொஹிதின் பெக் பாடிய 'மாட்டு வண்டியில் போறாளே', என்.ஜே.என். அன்சார் பாடிய 'சின்னஞ்சிறு' மற்றும் கண்ணனுடன் சேர்ந்து இசையமைத்து அமுதன் அண்ணாமலை பாடிய 'மாணிக்கத் தேரினில் மயில் வந்தது' போன்ற மெல்லிசைப் பாடல்கள் காலத்தால் அழியாதவை. கனகம்பாள் சதாசிவம், கலாவதி சின்னச்சாமி, அருள் இலங்திரா, கௌரீஸ்வரி, முத்தழகு, நித்தியகலா மகிந்தகுமார், டிலுக்சி போன்ற பல பாடகர்கள் இவர் யாத்த ஈழத்து மெல்லிசைப் பாடல்களைப் பாடியுள்ளனர்.

தமிழைப்போல் சிங்கள மொழியிலும் தேர்ச்சி பெற்ற சவாஹிர் பல சிங்களப் பாடல்களுக்கும் இசையமைத்துள்ளார். எச்.ஆர். ஜோதிபாலா போன்ற பிரபல்யமான சிங்களப் பாடகர்கள் இவரது பாடல்களைப் பாடியுள்ளனர்.

ஈழத்தில் தமிழ்ப் பொப்பிசை முகிழ்த்தெழுந்த 70களில் அமுதன் அண்ணாமலை, எஸ். ராமச்சந்திரன் ஆகிய இரு பெரும் பொப்பிசைக் பாடகர்களின் பெரும்பாலான பாடல்களை இவரே இசையமைப்பு செய்திருந்தார். அமுதன் அண்ணாமலை பாடிய 'ஓ...ஷீலா ஓ ஷாந்தி', 'முருகையா முருகையா', 'வண்ண வண்ணப் பூப்போலே' மற்றும் எஸ். ராமச்சந்திரன் பாடிய 'நத்தை என ஊர்ந்து நடக்கின்றார்', 'ஆடாதே ஆடாதே', 'வானநிலவில் அவளைக் கண்டேன்' என்பன சவாஹிர் அவர்கள் இசையமைத்த பாடல்களாகும்.

மேடை, வானொலி நிகழ்ச்சிகளுக்கும் அப்பால் திரைப்படத் துறையிலும் சீரிய பங்களிப்பை இவர் செய்திருந்தார். ஈழத்துத் தமிழ்த் திரைப்படங்களைப் பொருத்தவரை ஆரம்ப நாட்களில் தயாரிக்கப்பட்ட 'தோட்டக்காரி' என்ற திரைப்படத்துக்கு இசையமைப்பு செய்தவர் இவரே. 1963ல் வெளியான இத்திரைப்படத்தில் தான் முத்தழகு - டிலுக்சி இருவரும் இணைந்து பாடிய 'இக வாழ்வினிலே' என்ற அற்புதமாக இசையமைக்கப்பட்ட பாடல் இடம்பெற்றது. மேலும் இலங்கையில் வெளிவந்த 'மீனவப் பெண்' மற்றும் 'ஆதரயகமஹிம' என்ற சிங்களத் திரைப்படத்திற்கும் இசையமைப்பு செய்து ஈழத்துத் திரைப்படத்துறையில் பிரபலமான இசையமைப்பாளரானார்.




தென்னிந்தியத் திரைப்பட இசையமைப்பாளரான டி.ஆர். பாப்பாவுடன் இணைந்து பணியாற்றியது தனது வாழ்நாளில் மறக்க முடியாத அனுபவமாக சவாஹிர் குறிப்பிடுகிறார். சமரசம் உலாவும் இடமே, வருவேன் நான் உனது மாளிகையின் வாசலுக்கே போன்ற புகழ்பெற்ற பாடல்களுக்கு இசையமைத்த டி.ஆர். பாப்பா அவர்களின் உதவி இசையமைப்பாளராக 'சுஜாகேரச' என்ற சிங்களப் படத்தில் சவாஹிர் பணிபுரிந்திருந்தார்.

இவரது துணைவி அப்துல் மஜீத் ஹமீத அவர்கள். இசையே வாழ்வாக வாழ்ந்து வரும் சவாஹிர் அவர்களின் மூன்று புதல்வர்களும் தந்தையைப் போலவே இசைத் துறையில் புகழ்பெற்ற கலைஞர்களாக விளங்கிவருகின்றனர். அனாஸ் டிரம்ஸ் வாத்தியத்தில் தேர்ச்சி பெற்ற கலைஞனாகவும், ஹயாஸ் உலகத்தரத்தில் கீர்த்தி பெற்ற கிட்டார் வாத்தியக் கலைஞனாகவும் உள்ளனர். கடைசி மகன் பயாஸ் தற்போது கனடாவில் 'சுப்பர்சன்ஸ்' என்ற முன்னணி இசைக்குழுவை நடத்திவருகிறார். இவரது முயற்சியால் தந்தையார் சவாஹிர் அவர்கள் இசையமைத்த இனிய பாடல்கள் அடங்கிய தொகுப்பான 'நதிமூலத்தின் இசையூற்று'என்ற இசைத்தட்டு கனடாவில் வெளியிடப்பட்டது. இந்த இசைத்தட்டில் உள்ளூர்ப் பாடகரான செந்தூரன் அழகையாவின் 'காலாலே தாளம்போட்டு', 'சின்னப்பொண்ணு சிங்காரியே' போன்ற பாடல்களும் இடம் பெற்றிருந்தன.

ஈழத்து இசைத்துறையில் சரித்திரம் படைத்த கே.எம். சவாஹிர் அவர்களுக்கு பல பட்டங்களும் விருதுகளும் கிடைத்துள்ளன. 1980ல் சிறந்த இசையமைப்பாளருக்கான ஜனாதிபதி விருது J.R. ஜெயவர்த்தனாவால் வழங்கப்பட்டது. 1993ல் இஸ்லாமிய கலாச்சார அமைச்சினால் 'மூஷீக் நூரி' என்ற பட்டம் அப்போதைய ஜனாதிபதி D.B. விஜயதுங்காவால் சூட்டப்பெற்றார். இலங்கை கலாச்சார அமைச்சினால் 2005ல் கலாபூஷணம் விருதும் 2013ல் வாழ்நாள் சாதனையாளர் விருதும் இவருக்குக் கிடைத்துள்ளன. மேலும் கனடாவில் 'இசையரங்கம்' இவருக்கு 'இசைப் பேரொலி' என்ற பட்டம் வழங்கி கௌரவம் செய்துள்ளனர்.

இசையின் சகல பரிமாணங்களையும் தொட்ட சவாஹிர் என்ற மகோன்னத கலைஞன் நீடுவாழ தாய்வீடு வாழ்த்துகிறது.



sriskandan@thaiveedu.com